வாசிக்க: யோவான் 4:6-14

***"தாகமாயிருக்கிறேன்!" (யோ 19:28)***

சமாரியா நாட்டுப் பெண்ணிடம் "நான் கொடுக்கும் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கு ஒருபோதும் தாகமுண்டாகாது" என்று மொழிந்த ஆண்டவர் இயேசு இப்போது நாவறண்டு "தாகமாயிருக்கிறேன்" என்று கதறுகிறார். முந்திய இரவில் கெத்சமெனே தோட்டத்தில் இரத்த வியர்வை தரையில் சிந்த ஜெபித்தது, அதிகாரிகளிடம் அங்குமிங்கும் இழுத்துச் செல்லப்பட்டு வாரினால் அடிக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டது, முள்முடி சூட்டப்பட்டது, கனமான சிலுவையைச் சுமக்க முடியாமல் தடுமாறிக் கொல்கொதா மேட்டிற்கு நடந்துவந்தது — எல்லாம் சேர்ந்து கிழித்த அவரது உடல் சிலுவையில் தொங்கிக்கொண்டிருந்தபோது தாகத்தால் வாடுகிறார். மயக்கம் உண்டாக்கும் காடியையும் அவர் ஏற்றுக்கொள்ளவில்லை. எல்லா வேதனைகளையும் சுயநினைவோடு அனுபவிக்கத் தம்மை ஒப்புக்கொடுத்தார். எதற்காக ?

நாம் தாகமடையாதபடி கிறிஸ்து தாகமடைந்தார். நமக்காகத் திறக்கப்பட்ட ஊற்றாகும்படி அவர் பிளக்கப்பட்டார் (சக 13:1). அடிக்கப்பட்ட மேய்ப்பனாகிய அவர் மந்தையைவிட்டு ஓடவில்லை. அவர் மந்தையை "அமர்ந்த தண்ணீர்" அருகில் கொண்டுபோய் "நன்மையும் கிருபையும்" அளித்து ஆடுகளைத் திருப்தியாக்குகிறார் (சக 13:7; சங் 23).

இயேசு நமக்குத் தண்ணீர் கொடுப்பதோடல்லாது நமக்குள்ளேயே ஓர் ஊற்றையும் வைத்துவிடுகிறார். "நான் அவனுக்குக் கொடுக்கும் தண்ணீர் அவனுக்குள்ளே நித்திய ஜீவ காலமாய் ஊறுகிற நீரூற்றாயிருக்கும்" என்றார் (யோ 4:14ஆ). கிறிஸ்தற்றோரின் சோகநிலை என்னவெனில், ஒன்றுமே அவர்களைத் திருப்திப்படுத்துவது இல்லை. சம்பாதித்துப் பார்க்கிறார்கள், திருப்தியில்லை. பணம் கடல்நீர் போன்றது; குடிக்கக் குடிக்கத் தாகம் கூடும். அடுத்து பாலினப் பாவங்களைப் பருகிப் பார்க்கிறார்கள்; தாகம் தீர்ந்தபாடில்லை. பின்னர் தங்கள் சாதனைகளை வணங்கிப் பார்க்கிறார்கள். தங்கள் கைகளின் செயல்களைப் பார்த்து, "நீங்களே எங்கள் தெய்வங்கள்" என்கிறார்கள். அங்கும் ஏமாற்றம். சிலுவைதான் இறைவனின் கூட்டல் அடையாளம். அங்குதான் மனிதன் திருப்தி அடைகிறான். அந்தப் பழைய சிலுவைக்குமுன் சிற்றின்பங்களும் சம்பத்துகளும் அர்த்தமற்றுப் போகின்றன.

அவருக்குள் நமக்கு எல்லாம் கிடைக்கும்படி இயேசு சிலுவையில் எல்லாவற்றையும் விட்டார். "அனைத்து ஆன்மீக ஆசீர்வாதங்களும்" இன்று நமக்குச் சொந்தம் (எபே 1:3). நமது குறைவையெல்லாம் அவர் நிறைவாக்குகிறார் (பிலி 4:19). புரிந்துகொள்ளமுடியாத தேவ சமாதானம் கண்ணீரில் மிதக்கையில்கூட இதயத்தின் ஆழத்தில் திடமாயிருக்கும். அதுதான் இறைவன் தரும் திருப்தி! ஒரு நாள் வரும், அன்று சாதாரணப் பசிகூட நம்மை விட்டு எடுக்கப்படும். ஆட்டுக்குட்டியானவர் அடிக்கப்பட்டதால் என்னே ஆசீர்வாதம்!

*தாக மிஞ்சி நாவறண்டு தங்க மேனி மங்குதே,*
*ஏக பரன் கண்ணயர்ந்து எத்தனையாய் ஏங்குறார்!* *(கீர்த்தனை)*
*— சத்தியவாசகம் பண்டிதர், பாளையங்கோட்டை*